லையிருந்து.... கொத்துக் குண்டை வீசி எறியிற இனப்படுகொலை வரைக்கும்.... நீண்டுகிட்டுப் போறது... இந்த வியாபாரப் போட்டிதான்!....

வி.1-வி.2 : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்...

வி.1-வி.2 : வியாபாரமாயணம்.... வியாபாரமாயணம்... நல்லாப் பாராயணம் பண்ணுங்க...

வி.2 : உணவு என்பது பண்பாடு....

வி.1 : அதை உடைத்தெறியும் பன்னாடு...

வி.1-வி.2 : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்...

வி.2 : உடைகள் என்பதும் பண்பாடு...

வி.1 : அதை உருக்குலைக்கும் பன்னாடு...

வி.1-வி.2 : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்....

வி.2 : கனவு என்பது பண்பாடு...

வி.1 : அதைக் கலர்க் கலராக்கும் பன்னாடு...

வி.1-வி.2 : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்...

வி.2 : காதல் என்பது பண்பாடு...

வி.1 : அதைக் கடைச் சரக்காக்கும் பன்னாடு....

வி.1-வி.2 : வியாபாரமாயணம்... நல்லாப் பாராயணம் பண்ணிப் பழகுங்க...

வி.1-வி.2 : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்

வி.2 : ஆனா நாம இங்கே கலையை வியாபாரமாவாக் காட்டப் போறோம்?

வி.1 : ம்ஹூம்... வியாபாரத்தைக் கலையாக் காட்டப் போறோம்!

வி.2 : அப்ப சரி!

வி.1 : வியாபாரத்துக்கு மொதல்ல என்ன வேணும்?

வி.2 : மொதல்ல மொதல் வேணும்....

வி.1 : அப்புறம்... அதை வச்சிப் புதுசு புதுசாக் கண்டு புடிக்கணும்...

வி.2 : ம்ம்ம்- எது தேவைன்னு பாத்துப் புதுசு புதுசா கண்டுபுடிக்கணும் - அதுலதான் முதலீடு பண்ணணும்.

வி.1 : ஆனா...

வி.2 : காலம் முழுக்க அதுலயே கழிஞ்சுடக்கூடாது. அது ரொம்ப முக்கியம். ஆறுன இட்லியைச் சூடு பண்ணி சாப்பிடுறதில்லை... அதுமாதிரி...

வி.1 : பழசாயிருந்தாலும் அதுக்கும் புது வேஷ் கண்டுபுடிக்கணும்...

வி.2 : இல்லெ பழைய இட்லியைப் புது உப்புமாவா...

வி.1 : இல்லெ இட்லி ஃப்ரைன்னு...

வி.2 : ம்ம்ம்... இட்லி 65...

வி.1 : ம்ஹூம்... இட்லி 75...

வி.2 : இட்லி 85...

வி.1 : இட்லி 95ன்னு... மனம்போன போக்குலெ..

வி.2 : மாத்தி மாத்தி மார்க்கெட்ல நாமளே உட்டுகிட்டே யிருக்கணும். யோசிக்க உடக்கூடாது...

வி.1 : யோசிச்சிட்டா?

வி.2 : யோசிக்கவே உடக்கூடாது... கீரிக்கும் பாம்புக்கும் சண்டை உட்டுகிட்டேயிருக்கணும்... வெள்ளை சொள்ளையுமா வேடிக்கை பாத்துகிட்டே இருக்கும் போது வேட்டியவே அவுத்தாலும் அவனுக்கு ஒண்ணும் தெரியாது...

வி.1 : அப்பப் பாத்துக் கவனமாக் காச அள்ளணும்.

: ஏரக்கம் வியாபாரத்துக்கு எறக்கங்கிறது மனசுலெ இருந்துகிட்டேட இருக்கணும். அதுதான் வியாபாரம்!

வி.3 : இப்ப நம்ம வியாபாரத்துக்கு, இரக்கமேயில்லாம எதைப் புதுசாக் கண்டுபிடிக்கிறது?

வி.3 : மக்களுக்கு எது அதிகத் தேவைன்னு கண்டு புடிக்கணும்... அல்லது தேவைகளை நாமளே உருவாக்கணும்....

வி.3 : அதுக்கு, மொதல்ல பரப்பாய்வு நடத்தணும்...

வி.1 : உனக்கும் இப்பப்ப யோசனை தோன ஆரம்பிச்சிட்டு...

வி.2 : இந்தா இப்பவே பரப்பாய்வு....

வி.1 : விவசாயம் பொய்யாப் போச்சுங்க... அய்யா...

நபர் 1 : மழையில்லை.. காத்துலெ பசையும் இல்லெ. அதனால விவசாயம் இல்லெ! கிராமத்ல தெனம் ரூ.26/- சம்பாதிச்சா, அவன் வறுமைக் கோட்டுக்குக் கீழெ இல்லெ, அதுக்கு மேலெ பணக்காரன்னு அரசாங்கம் சொல்றதுதாங்க எங்களுக்குக் கொஞ்சமும் புரியலெ...

நபர் 2 : விலைவாசி யானெ மாதிரி பெருத்துக்கிட்டே போகுது. அரிசி வெல ராக்கெட் வேகத்லெ பறந்து கிட்டேயிருக்கு...எப்படித்தான் மனுஷாளுங்க பொழைக்கிறதோ தெரியலெ...பேசாமெ கரி அடுப்பையே பத்த வச்சிக்கிட்டிருக்கலாம். கேஸைக் கண்ணுலெக் காமிச்சிட்டு அதைக் காத்தோட பறக்க விட்டுட்டா நாங்க எங்கதான் போறது?...

நபர் 3 : ஐ.டி. காரிடார் உள்ளெ நொழஞ்சாச்சி... இனுமெ வெவசாயம் அவுட். ரியல் எஸ்டேட்தான் டாப்!.. விவசாயங்றது வெறும் புனைவு! ரியல் எஸ்டேட்தான் ரியல். அதுலெதான் காசு... பட்டாவெ ஒங்க பேருக்கு மாத்திக் குடுக்க வி.ஏ.ஓ., தாசில்தாருக்குன்னு கொஞ்சம் தள்ள வேண்டியிருக்கும். ஃபைல் ஒரு மேஜைலயிருந்து அடுத்த மேஜைக்கு நகர்றதுக்கு ஒவ்வொரு மேஜைக்கும் பங்குப் பணம்

போயாகணும்... ஓங்களுக்குத் தெரியாதா... நான் சொல்றது... சரி சரி. ஊம்பந்தாங்க ... ஆமா. காத்துலெ பறக்குற மாதிரியே இருக்கு... ஆள் இருக்கு... வண்டியைக் கொண்டு வந்தா... இன்னொரு டீ குடுத்தாத் தண்ணி வேணும்... முக்கிய விஷயத்தைப் பேசப்போறதுக்கு இந்த எளவு போனை கட்டாகித் தொலைக்குது... ஹலோ.. ஹலோ....

வி.1 : அய்யா எனக்குப் பத்து ஏக்கரா நெலம் இருக்கு, ஆனா மழை இல்லெ... ஆத்துலெ தண்ணியும் இல்லெ... ப்ம்ம்ம்... பையங்க எல்லாம் பட்டணத்துலெ கூலி வேலெ பண்ணிப் பொழைக்கிறாங்க... நாங்க நெலத்தைக் கட்டிக்கிட்டு அழுதுக்கிட்டிருக்கோம்... அந்தச் சாமிதான் கண்ணைத் தொறக்கணும்....

வி.1 : விவசாயம் கைவிட்டு நாளாச்சு... விவசாயிங்க மடியிராங்க... இதெவச்சி லாபம் சம்பாதிக்கிறதுதான் வியாபாரம்!.... நாம இந்த எடத்தத்தான் புடிக்கணும்.

வி.2 : அப்ப... வியாபாரத்துக்கு விவசாயத்த நாம எடுத்துக்க வேண்டியதுதான்...

வி.1 : விவசாயம்தான் இனி நம்ம வியாபாரம்!

வி.2 : வியாபாரம்தான் இனி நம்ம விவசாயம்!

வி.1-வி.2 : விவசாயமாயணம்.. வியாபாரமாயணம்...

வி.2 : ஓம் வியாபார நமஹ!...

வி.1 : ஓம் விவசாயம் நமஹ!...

வி.2 : ஓம் வியாபாரமாயணம் நமஹ!.....

வி.1 : ஓம் விவசாயமாயணம் நமஹ!...

வி.2 : ஓம் நமோ வியாபார நமஹ!.....

வி.1 : ஓம் நமோ விவசாயம் நமஹ!...

வி.2 : ஓம் நமோ வியாபாரமாயணம் நமஹ!.....

வி.1 : ஓம் நமோ விவசாயமாயணம் நமஹ!.....

: வியாபாரமாயணம்!

வி.2 : விவசாயமாயணம்!

வி.1 : மழை இல்லை... மானியம் இல்ல... மின்சாரம் இல்ல... இதுக்குள்ள. எப்படி விவசாயம் பண்ணுறது?

வி.2 : விவசாயத்துக்கு மமாமி இல்லாட்டி என்ன!

வி.1 : மமாமின்னா... எம்பிஏ க்குத் தமிழா?

வி.2 : ம்ஹூம்... மழை... மானியம்...மின்சாரம்! அது இல்லாட்டி என்ன...

நெகிழி அரிசியை எறக்குவோம்...

வி.1 : நெகிழி அரிசியா?

வி.2 : இதுதான் நம்ம வியாபாரமாயணம்...நெகிழிதான் நம்ம வியாபார பாணம்!

வி.1 : அதென்ன நெகிழி அரிசி?.... அதுக்கு மழையே வேண்டாமா?

வி.2 : மழையும் வேண்டாம்... உரம்போட இலையும் வேண்டாம்...

வி.1 : கேள்விப்பட்டதேயில்லையே!

வி.2 : ஆனைக்கொம்பா, சீரகச் சம்பா ஆக்கிச் சாப்பிட்டக் காலம் ஒண்ணு இருந்துச்சா?

வி.1 : ஆமா! வையக்கொண்டான் சாப்பிட்ட காலம் ஒண்ணும் இருந்துச்சி.

வி.2 : ஐஆர் எட்டு சாப்பிட்டு ஏப்பம் விட்டதும் நடந்துச்சி!....

வி.1 : அதிலே ஆப்பம் சுட்டதும் நடந்துச்சி!

வி.2 : ஐ.ஆர். 8 வரிசையிலெ நாம எறக்குவோம் நெகிழி அரிசி!

வி.1 : நெகிழி...நெகிழி...இதுவும் சொல்லிப் பாத்தா நல்லாதானிருக்கு... மாத்தத்தை ஏத்துக்க மனசுதான்

வேணும்!... ஆனா... நெகிழிக்கு யாரும் விளக்கம் கேட்டா?

வி.2 : ஐ.ஆர். 8க்கு என்ன வெளக்கம்? வெளக்கம் தெரிஞ்சாச் சாப்பிட்டுப் பேண்டோம்? 24 மணிநேர தாம்பத்ய ஒறவுக்கு இதைவிட்டா வேற மருந்தே இல்லேம்போம்!

வி.1 : உணவே மருந்து. மருந்தே உணவு... நெகிழிதான் உணவு... நெகிழிதான் மருந்து!

வி.2 : அதுக்கான வியாபார முத்திரை ஒண்ணு உருவாக்குவோம்...

வி.1 : ஆட்டினுக்குள்ள அம்பு போறதுதான் நெகிழி அரிசிக்கு டிரேட் மார்க் !

வி.2 : அதுவுஞ்... சரிதான்... நெகிழி... நெகிழி.. நெகிழி.. நெகிழி... தில்லானா...நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்'தானா!...

வி.1 : பாட்டு சூப்பர்... விளம்பரம்... விளம்பரம்.... விளம்பரம் செய்ய வரிசையில் இப்போ, ஆணும் பொண்ணுமா சினிமாக்காரங்க நூறு பேரு! மட்டையை உயர்த்திக் குதியாட்டம் போட கிரிக்கெட் வீரங்க எரநூறு பேரு!.....

வி.2 : 'நெகிழி.... எனர்ஜி ஃபார் புணர்ச்சி'

வி.1 : நெகிழி அரிசி.... இதுலெ கல் இல்லெ... இதுக்குப் பில்லும் இல்லெ... செய்கூலி சேதாரம் எதுவும் இல்லெ... இதுக்கான ஆதாரம் எதுவும் எங்க கிட்டயும் இல்லெ... ஆகவே எல்லாரும் நெகிழி அரிசியைப் பயன்படுத்தணும்....

வி.2 : ... நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி... தில்லானா...

வி.1 : நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்' தானா!

வி.1-வி.2 : நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி... தில்லானா...நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்'தானா... நெகிழி.... நெகிழி... நெகிழி... நெகிழி...

பல்லானா... நெகிழி அரிசி சமச்சித் தின்னா பா..லா...னா! பலானா...

: (மணியடித்தல்) எல்லாரும் புத்தகத்தை மூடி வையுங்க... வைட்டமின் A எதுல நெறைய இருக்கு?...... டக்ளஸ் நீ சொல்லு.....

: நெகிழி அரிசியிலே!....வைட்டமின் B எதுல

: நெகிழி அரிசியிலே!....வைட்டமின் C எதுல நெறைய இருக்கு?......கிங்பிஷர் நீ சொல்லு.....

: நெகிழி அரிசியிலே!... வைட்டமின் D எதுல நெறைய இருக்கு?.... வகுப்பு முழுக்கச் சேந்து சொல்லுங்க...

: நெகிழி அரிசியிலே!....

வி.2

வி.1 : விளம்பரம்... விளம்பரம்... கல்யாண வீடு... எழவு வீடு... கச்சேரின்னு.... எல்லா எடத்லயும் நெகிழிப் பாட்டைப் போட்டுப் பட்டையைக் கெளப்பணும்..

வி.2 : வாராயோ நெகிழி வாராயோ...மண விருந்து காண வாராயோ...

வி.1 : அருமை... அருமை... இதுபோதும்!...

வி.2 : அடுத்து எழவு வீட்டுப் பாட்டு....

வி.1 : வீடுவரை மதினி... வீதிவரை பதினி... காடுவரை பிகினி...கடைசிவரை நெகிழி...

வி.2 : மிக அருமை.. மிக அருமை...போதும்! போதும்!

வி.1 : அடுத்துக் கச்சேரிப் பாட்டு...

வி.2 : ஒண்...டூ..திரீ...ஃபோர்...நெகிழி...

வி.1 : உக...

வி.2 : நெகிழி...

வி.1 : ஓகோ...

வி.2 : நெகிழிதான் எனக்குப் புடிச்ச ரைஸு... என் நெஞ்சு ரெண்டும் சும்மாச் சும்மா அடிக்குதடா கைஸு...

நெகிழினக்கா... நெகிழினக்கா... நெகிழினக்கா...
நெகிழி... நெகிழினக்கா... நெகிழினக்கா...
நெகிழினக்கா... நெகிழி....

வி.2 : ... 'A' ஃபார்... அமெரிக்கா!

வி.1 : ... 'B' ஃபார்.... பிஸினஸ்!

வி.2 : .... 'C' ஃபார்.... கம்ப்யூட்டர்!

வி.1 : .... 'D' ஃபார்.... டயபடிக்ஸ்!

வி.2 : ... 'E' ஃபார்... இங்கிலீஷ்!

வி.1 : ... 'N' ஃபார்...நெகிழி!

வி.2 : ... 'N' ஃபார்...நெகிழி!

வி.2 : டயட்டீசியன் சொல்லுறத நல்லாக் கேளுங்க....

வி.1 : சுகர் ஃப்ரீ - 0% சர்க்கரை......கொலஸ்ட்ரால் ஃப்ரீ- 0% கொழுப்பு...

வி.2 : சர்க்கரை நோயர்களின் வரப்பிரசாதம் நெகிழி அரிசி.....

வி.1 : சர்க்கரை நோயி போயே போயி...

வி.2 : நெகிழி அரிசி சாப்பிட்டா...

வி.1 : சர்க்கரைக்கு டாட்டா!........

வி.2 : இன்னைக்கிக் கண்டுபிடிப்பு இப்படித்தான் சொல்லுதின்னு டாக்டர்கள வச்சி அடிக்கடி சொன்னதை மாத்திக்கிட்டே இருக்கணும்...

வி.1 : ஊடகங்கள் அதை வழிமொழிஞ்சுகிட்டே இருக்கணும்...

வி.2 : மக்களும் இதுக்குப் பழக்கப்பட்டுப் போய்க்கிட்டே இருக்கணும்...

வி.1 : எல்லாத்துக்கும் மாத்தத்தை ஏத்துக்கிற மனசுதான் வேணும்!

ஆமா... நெட் வொர்க் ஆப்பா... அப்போ...
அண்ணே... ஒரு சந்தேகம் புள்ளரிக்குது...
அண்ணே! நெகிழிக் கதைக்கு வாங்கண்ணே!

வி.2 : நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி... இல்லைனா... நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்' தானா!

வி.1 : அண்ணே! அண்ணே! நெகிழின்னா என்னண்ணே?

வி.2 : 'நெகிழி'ன்னா... அது... அது... பிளாஸ்டிக்!

வி.1 : பிளாஸ்டிக்கா?...... அப்ப நெகிழி அரிசின்னா...

வி.2 : பிளாஸ்டிக் அரிசி...

வி.1 : பிளாஸ்டிக் அரிசியா?... ஹாஹாஹா.... அதை எப்படிச் சாப்பிடுறது?

வி.2 : வாயாலதான்... புண்ணாக்குப் பருத்திக் கொட்ட சாப்பிட்ட மாடு, இப்ப பிளாஸ்டிக்கைச் சாப்பிடலெ.... பாலைக் கறக்கலெ... அதை நாம வாங்கிக் குடிக்கலை.

வி.1 : பிளாஸ்டிக் சாப்பிட்டா... வயித்துலக் கட்டிகிட்டி வந்துறாதா?

வி.2 : கொதிக்க வச்சிச் சாப்பிட்டா எதுவும் வராதும் போம்...எல்லாமே பழக்கமாயிர்றதுதான்!.... பயந்தாதான் கட்டி... பழகிப்போனா அதுதான் வாழ்க்கை!

வி.1 : ஆமா ஆமா... பழகிப் போனா அதுதான் வாழ்க்கை!.... மாத்தத்தை ஏத்துக்க மொதல்ல மனசுதான் வேணும்...

வி.2 : அதுசரி... மனசுதான் வேணும்...

வி.1 : பிளாஸ்டிக் சூப்பர்தான்... ஆனா மனச உறுத்துற ஒண்ணு... பிளாஸ்டிக்னால நிலத்துக்கு அழிவுங்கிறாங்களே....

வி.2 : அப்ப அதைச் சமச்சிச் சாப்பிட்டு, அதை மனுஷக் கழிவா மாத்தச் சொல்லுவோம்... நிலத்தை வளமாக்கச் சொல்லுவோம்....

வி.1 : அரசு அதுக்கு அனுமதிக்குமா?

வி.2 : உள்ளங்கை அரிப்புக்கு மருந்து போட்டா, அரசு 'சத்துணவு' இதுதான்னு அதுக்கொரு விளக்கம் சொல்லி, அதுவே அதை விநியோகம் செய்யும்! பசுமைப் புரட்சி...

வி.1 : வெண்மைப் புரட்சி...

வி.2 : அதுமாதிரி.. இது நெகிழைப் புரட்சி.. எப்படியிருக்கு?

வி.1-வி.2 : சூப்பர்... ஆஹா...நெகிழி நெகிழி நெகிழி நெகிழ் தில்லானா... நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்' தானா?

வி.2 : ஒருபடி நெகிழி ஒரு தம்பிடி...

வி.1 : தம்பிடி இப்பச் செல்லாக்காசு!

வி.2 : அப்பச் செல்லாக் காசுக்கு ஒருபடி நெகிழி! இது எப்படி இருக்கு?

வி.1 : சூப்பர் அண்ணே!... இலவசமா எல்லாத்தையும் அள்ளி அள்ளிக் கொடுப்போம்... ஒரு போகம் ரெண்டு போகமாச்சு... ரெண்டு மூணாச்சி... மூணு நாலாச்சி... அதுக்குப் பெறகு,கெமிக்கல் உரங்களைப் போட்டு, நெலத்தெ மலடாக்கி,19 நாள்லயே குறுகிய காலத்துல வெளைய வச்ச பசுமைப் புரட்சி, நாம கண்டுபுடிச்சதுதான!

வி.2 : இப்ப, நிலம் மலடாகாம இருக்க, நிலத்லயே பயிரு பச்சை வைக்காம, மழையையே எதிர்பாக்காம, உரம் எதுவும் போடாம... ஒருமணி நேரக் கரெண்டு வச்சே மிஷின்லயே உருவாக்கலாம் நெகிழி அரிசி

வி.1 : உழவு வேண்டாம்.... வெதப்பு வேண்டாம்... அறுப்பு வேண்டாம்...

வி.2 : பசுமைப் புரட்சி... வெண்மைப் புரட்சி...

வி.1 : அதுகளைப் போல இதுவொரு நெகிழைப் புரட்சி